**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *273*** **நாள் : *16.09.2022***

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சென்னையில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்களும் இன்று *(16.09.2022)* தொடங்கி வைத்தனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் *110*ன் கீழ், தமிழ்நாட்டில் முதற்கட்டமாக சில மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் தொலைதூர கிராமங்களில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை வேளைகளில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் *15.09.2022* அன்று காலை உணவினை மாணவ, மாணவியர்களுக்கு பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்களும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம், சென்னை தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை இன்று *(16.09.2022)* தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உணவருந்தினர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் திருவொற்றியூர், மாதவரம், தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் ஆகிய மண்டலங்களில் உள்ள *37* சென்னை தொடக்கப்பள்ளிகளில் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் *37* சென்னைப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் *5941* மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை தொடக்கப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும், காலை வேளைகளில் திங்கட்கிழமை – உப்புமா வகை, செவ்வாய்கிழமை – கிச்சடி

வகை, புதன்கிழமை - பொங்கல் வகை, வியாழக்கிழமை - உப்புமா வகை மற்றும் வெள்ளிக்கிழமை – கிச்சடியுடன் இனிப்பும் வழங்கப்பட உள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு உணவு சமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கீழ்க்கண்ட 6 இடங்களில் மைய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. எண்ணூர், தாழங்குப்பம், புயல் காப்பகம்
2. எண்ணூர், அன்னை சிவகாமி நகர், அம்மா உணவகம்,
3. மாதவரம், ஜி.என்.டி. சாலை, சி.எம்.டி.ஏ. டிரக் டெர்மினல் பில்டிங்,
4. கொடுங்கையூர், டாக்டர் ராஜரத்தினம் நகர், சென்னை தொடக்கப்பள்ளி,
5. சிகரந்த பாளையம், பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடம்,
6. இராயபுரம், எஸ்.என்.செட்டி தெரு, பெருநகர சென்னை மாநகராட்சி பழையக் கட்டடம்

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள், முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள் திரு.த.விசுவநாதன் (கல்வி) அவர்கள், திரு.தா.இளைய அருணா (நகரமைப்பு) அவர்கள், டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்) அவர்கள், இணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.சங்கர்லால் குமாவாத், இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத் தலைவர் திரு.எஸ்.நந்தகோபால் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்) திரு.சூரியபிரகாஷ், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**